**தலைப்பு 253 – ஓய்வூதிய திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 253 – ஓய்வூதிய திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 யூன் 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதிய திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டிலிருந்து பேணப்பட்டு வரும் இலங்கை வங்கி – டெலர் இயந்திரம் அமைந்துள்ள பகுதிக்கு முறைப்படியாக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருக்காத துடன் வாடகை வருமானமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை செய்து கொள்ளல் மற்றும் கட்டிட வாடகையை அறவீடு செய்தல் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முறைப்படியாக உடன்படிக்கை செய்வதற்கும் வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2001 சனவரி 15 ஆந் திகதிய 1/2001 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 1(அ) பந்தியில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஏனைய நிறுவனங்களினால் செலவு வைக்கப்பட்ட ரூபா 23,009.29 மில்லியன் பங்களிப்பு பணம் தொடர்பாக செலவு அறிவித்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் | நிறுவனங்களிடமிருந்து வரவு அறிவித்தல்களை கேட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது டன் தற்பொழுது வரவு அறிவித்தல்கள் கிடைத்துக்கொண்டு இருக்கின்றன. கணக்கிற்கு உரிய குறுக்குப் பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செலவுவைத்தல்கள் சம்பந்தமாக ஒவ்வொரு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 166.99 மில்லியன் வரவு வைத்தல்களில் ரூபா 166.79 மில்லியன் வரவுவைத்தல்களை உறுதிப்படுத்துவதற்காக உரிய நிறுவனங்களிடமிருந்து வரவு அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினையும் பின்தொடர் நடவடிக்கை எடுத்துப் பார்த்தல் எங்கள் திணைக்களத்திற்கு நடைமுறையில் சிக்கலான ஒரு நடவடிக்கையாகும். அவ்வாறே காணப்படுகின்ற குளப்பமான அரசியல் நிலைமையின் காரணமாக ஒவ்வொரு தலைப்புக்குமுரிய நிறுவனங்களின் சேர்த்தல் இரத்துச் செய்தல் முதலிய காரணங்களும் இந்த முரண்பாடு தொடர்பாக தாக்கமளித்துள்ளது. | |
| (இ) | சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணத்தை மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் வருமான கணக்கின் கீழ் பங்களிப்புச் செய்துள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமான தரவு முறைமையை பேணுவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்காததனால் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு பணத்தை மீளச் செலுத்துதல் முதலிய பிரதி பலன்களை உரிமைகொள்ளும் போது பங்களிப்பு பணம் அந்த அந்த நபர்களிடமிருந்து நிரந்தரமாக தொடர்ச்சியாக கிடைத்ததா என்பதனை திணைக்களம் உறுதிப்படுத்திக்கொள்ளும் முறையான நடைமுறை இருக்கவில்லை. | இச்சிக்கலுக்கான தீர்வாக தற்பொழுது விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு பணத்தை அறவீடு செய்வது தொடர்பான விபரத்தினை தனிப்பட்ட கோவைக்குள் உள்ளடக்குவது சம்பந்தமாக சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. பங்களிப்பு பணத்தை மீளச்செலுத்துதல் முதலிய பிரதிபலன்களை உரிமைகொள்ளும் போது பங்களிப்பு பணம் நிரந்தரமாக தொடர்ச்சியாக கிடைத்ததா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். | பங்களிப்பாளர்கள் மற்றும் பங்களிப்பை செலுத்துதல் தொடர்பான தரவு முறைமையை பேணி பங்களிப்பு பணம் நிரந்தரமாக கிடைத்ததா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 சனவரி 15 ஆந் திகதிய 01/2001 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையினால் அனைத்து | அமுலுக்கு வரும் மாதத்தின் பங்களிப்பு பணத்தை ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படுவதாவது சம்பளம் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் என்பதனால் அடுத்துவரும் மாதத்தின் 15 | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகங்களினதும் பங்களிப்பு பணத்திற்காக ஒரு காசோலை வழங்கப்படுமாகவிருந்தால் ஒவ்வொரு மாதத்தின் அறவீட்டினை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் 5 மாகாண சபைகளிடமிருந்து 5 நாட்களிலிருந்து 69 நாட்கள் வைரயான கால தாமதத்தில் காசோலைகள் கிடைத்திருந்தன. | ஆந் திகதியளவில் அப்பணத்தை பெற்றுக்கொள்ளுதலானது நடைமுறையில் செய்யமுடியாததனால் அந்த மாதத்தின் 20 ஆந் திகதி வரை காலம் வழங்குதல் இடம்பெற்றுள்ளதுடன் தாதமாகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொலைபேசி வழியாகவும் கடிதத்தின் மூலமும் உரிய பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | காசேலைகள் மூலம் பங்களிப்பு பணத்தை அனுப்புகின்ற 19 நிறுவனங்கள் சமர்ப்பித்த ரூபா 23.75 மில்லியன் பெறுமதியான 26 காசேலைகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2022 சனவரி 12 ஆந் திகதியிலிருந்து 2022 திசெம்பர் 27 ஆந் திகதி வரை மீளத் திருப்பி அனுப்பியிருந்த போதிலும் 2023 ஏப்ரல் 01 ஆந் திகதியளவில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அப்பங்களிப்பு பணம் மீள அறவிடப்பட்டிருக்காததுடன் அது ஆண்டின் இறுதியில் நிலுவை வருமானமாகவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மீளத்திருப்பி அனுப்பிய காசேலைகள் எங்களுக்கு கிடைத்ததா என்பதனை உறுதியாக இனங்காண முடியாததனால் மற்றும் திருப்பி அனுப்பிய சில காசேலைகள் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குரியதல்லாத சந்தர்ப்பங்களும் உள்ளதனால் அக்காசோலைகளின் பெறுமதியை நிலுவை வருமானமாக கணிப்பீடு செய்ய முடியாதுள்ளது. | நிலுவை வருமானத்தை சரியாக இனங்காணுதல் வேண்டும். |
| (ஊ) | காசேலைகளை திருப்பி அனுப்பும் பதிவேட்டிற்கு இணங்க திருப்பிய அனுப்பிய காசேலைகளுக்காக ஏனைய காசோலைகளை அனுப்பும் சந்தர்ப்பத்தில் அந்த திருப்பி அனுப்பிய காசேலைகளின் பெறுமதியானது தொடக்க காசோலைகளின் | விதவைகள் அனைாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்காக மாதாந்தம் 900 காசோலைகள் அளவில் கிடைக்கின்றன. அவ்வாறு திருப்பி அனுப்புகின்ற காசேலைகள் எங்களுக்கு கிடைப்பதற்கு குறிப்பிடத்தக்க அளவு | திருப்பி அனுப்பிய காசோலைகளுக்காக பணம் கிடைத்ததா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுமதியினை விட கூடுதல் பெறுமதியினைக் கொண்ட 02 சந்தர்ப்பங்களும் குறைந்த பெறுமதியைக் கொண்ட 01 சந்தர்ப்பமும் காணப்பட்டது. | காலம் எடுப்பதனாலும் அந்த திருப்பி அனுப்பிய காசோலைகள் எங்களுக்கு கிடைத்ததா என்பதனை உறுதியாக இனங்காண்பது நடைமுறையில் செய்ய முடியாத ஒன்றாகும். | |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஓய்வூதியம் செலுத்தும் நடைமுறை தொடர்பாக மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக மீளாய்வினை மேற்கொண்டு காலத்துக்கு காலம் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையில் அத்தியவசியமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1719/3 ஆம் இலக்க 2011 ஆகஸ்ட் 15 அந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல | - | | | |
| | • 9 ஆவது பிரிவு | - | பிறப்பிலேயே முழுமையாக ஊனமுற்றிருக்காத நபர்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மருத்துவ சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் பாததும்பர பிரதேச செயலகத்தில் எந்த ஊனமுற்றோர் கோவை சம்பந்தமாகவும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாததும்பர பிரதேச செயலகம் எதிர்காலத்தில் மருத்துவ சபைக்கு அனுப்பிவைத்து மருத்துவ அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுககும் என குறிப்பிட்டுள்ளது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2006 திசெம்பர் 15 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | - | கிராம உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய விடயம் சம்பந்தமான பொறுப்புக்களை ஒப்படைத்தலின் கீழ் கிராம சேவை உத்தியோகத்தர்களி | பிரதேச செயலகத்திடமிருந்து பதில் கிடைத் பின்னர் சமர்ப்பிப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | னால் பேணப்படுகின்ற ஓய்வூதியக்காரர்கள் தொடர்பான தொடக்க பதிவேடு பிரதேச செயலகத்தின் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2010 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 8/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 10 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 22,992,945 | ஒரு அரசாங்க ஊழியருக்கு கிடைக்கின்ற ரூபா 7,800 வாழ்க்கைச் செலவுப் படியினை மிகைத்து ஒரு ஓய்வூதியக்காரருக்கு வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தாதிருக்க வேண்டிய போதிலும் நாரம்பல பண்டுவஸ்நுவர (மேற்கு), பியகம, தொம்பே, திம்பிரிகஸ்யாய, ரிதிகம, கம்பஹா, களணி ஆகிய பிரதேச செயலகங்களில் அப்படியினை மிகைத்து 44 ஓய்வூதியக்காரர்கள் மற்றும் மரணமடைந்த 82 கடற்படை வீரர்களாக 129 நபர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 7,800 வரை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் 43 | வாழ்க்கைச் செலவுப் படியினை மிகையாகச் செலுத்துதல் மற்றும் குறைவாகச் செலுத்துதல் சம்பந்தமாக மேலும் பரீட்சிப்புக்களைச் செய்து பதில் வழங்குவதற்கு குறித்துக்கொள்கிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஓய்வூதியக்காரர்களுக்கு ரூபா 7,120,689 வாழ்க்கைச் செலவுப்படி குறைத்து செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2010 திசெம்பர் 16 ஆந் திகதிய 13/2010 ஆம் இலக்க மற்றும் 2013 செப்தெம்பர் 20 ஆந் திகதிய 03/2013 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 1,892,716 | மீண்டும் திருமணம் செய்யும் விதவைக்கு விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திலிருந்து 50 சதவீதத்திற்கு தகமை பெறுவதாக இருந்த போதிலும் மீண்டும் திருமணம் செய்ததன் பின்னரும் முழுமையான ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்ததனால் தொம்பே, கம்பஹா, நாரம்பமல, ஆகிய பிரதேச செயலகங்களின் 4 ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | பிரதேச செயலகங்களிடமிருந்து பதில் கிடைத்ததன் பின்னர் பதிலை சமர்ப்பிப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2014 பெப்ரவரி 20 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுறறறிக்கை | 557,607 | பயங்கரவாதத்தின் காரணமாக மரணமடைந்த மற்றும் காணாமல் போன பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்கிவாழ்வோர்களுக்கு தங்கிவாழ்தல் படியினை செலுத்துதல் ஆரம்பிக்கப்படுகையில் இழப்பீட்டு ஓய்வூதியம் செலுத்திக் கொண்டு இருக்கப்படுமாயின் இழப்பீட்டு ஓய்வூதியம் | ஓய்வூதியம் மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 557,607 இல் ரூபா 175,570 நிலுவைப்பபணத்தைச் செலுத்தும் போது அறவிடப்பட்டடுள்ளது. மிகுதியான ரூபா 401,792 பணம் 2023 யூலை மாதத்திலிருந்து அறவீடு செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறுத்தப்பட வேண்டியதுடன் உரிய இழப்பீட்டு ஓய்வூதியத்தினை மிகையாகச் செலுத்திய ஓய்வூதியத்துடன் இடைக்கால படி மற்றும் வாழ்க்கைச் செலவு படி தங்கி வாழும் படியினை நிலுவைப் பணத்திலிருந்து அறவிட வேண்டிய போதிலும் ரிதிகம பிரதேச செயலகம் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஊ) | 2014 - ஒக்தோபர் 16 ஆந் திகதிய 04 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை கடிதத்தின் (iv) ஆம் பந்தி | முதலாவது மாத ஓய்வூதிய கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டு உச்ச அளவாக 03 மாதங்கள் கடந்திருக்கையில் ஓய்வூதியக் கோவைகளை உரிய பிரதேச செயலகம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் பாததும்பர, குண்டலசாலை, களணி நாரம்பல, பியகம ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய 27 கோவைகள் முதலாவது ஓய்வூதியம் செலுத்தி 4 மாதங்களிலிருந்து 02 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தும் அவ்வாறு கோவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை | குண்டசாலை பிரதேச செயலகத்தில் 16 ஓய்வூதியக்காரர்களில் 13 ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியக் கோவைகள் தற்பொழுது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் மிகுதி 03 ஓய்வூதியக் கோவைகளின் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. ஏனைய பிரதேச செயலகங்களிலிருந்து பதில் கிடைத்த பின்னர் பதிலை சமர்ப்பிப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2014 நவம்பர் 03 ஆந் திகதிய 13/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 150,500 | மாதாந்தம் செலுத்தப்படுகின்ற பாதீட்டு படியானது சில ஓய்வூதியங்களை ஒன்றிணைத்து பெறுகின்ற சந்தர்ப்பங்களில் ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திற்கு மாத்திரம் செலுத்த வேண்டிய போதிலும் குளியாபிடி (கிழக்கு) பிரதேச செயலகம் 40-3011 ஆம் இலக்க ஓய்வூதியத்தின் கீழ் இடைக்கால படி ரூபா 4,750 தொகையும் 4-21321 ஆம் இலக்கத்தின் கீழ் ரூபா 1,750 தொகையும் செலுத்தப்பட்டிருந்ததனால் 2014 செப்தெம்பரிலிருந்து 2022 திசெம்பர் வரை படிகள் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தன. | ஓய்வூதிய இலக்கம் 40-3011 மற்றும் 04-21321 என்பவற்றிற்கு படிகளை திருத்தம் செய்யும் போது மிகைக் கொடுப்பனவு இடம்பெற்றுள்ளதுடன் துரிதமாக அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச செயலகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2016 ஏப்ரல் 27 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | | | | |
| | (i) 3 ஆம் பந்தி | - | வத்தளை பிரதேச செயலகத்தில் 2016 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற 14 ஓய்வூதியக்காரர்களுக்கான ஓய்வூதிய முரண்பாடுகளை | ஓய்வூதியக் கோவைகளைப் பரீட்சித்து எதிர்காலத்தில் முரண்பாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தயாரிக்காது இடைக்கால படி செலுத்தப்பட்டிருந்தது. | பிரதேச செயலகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ii) | 7 ஆம் பந்தி | 764,719 | 2016 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியக்காரர்களுக்கு இடைக்காலப் படிக்கு தகமையில்லாதிருந்த போதிலும் வத்தளை, பாததும்பர, குண்டசாலை, ஹரிஸ்பத்துவ ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய 64 ஓய்வூதியக்காரர்களுக்கு இடைக்காலப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | பாததும்பர பிரதச செயலகம் ஏழு ஓய்வூதியக்காரர்களுக்கு 55 வயது வரை சம்பளம் செலுத்தியிருந்ததனால் முரண்பாட்டிற்கு தகமை இல்லை எனவும் மூன்று நபர்களின் முரண்பாட்டினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. குண்டசாலை மற்றும் வத்தளை பிரதேச செயலக்ஙகளின் பங்களிப்பாளர்கள் 2016 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றுச் சென்றவர்களாகும். ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகம் முரண்பாட்டினை தயாரித்திருந்தும் செலுத்தாமைக்கான காரணத்தை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | 2017 ஏப்ரல் 07 ஆந் திகதிய 01/2011 (திருத்தியது) 1 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | ஓய்வூதிய கொடுப்பனவு நடைமுறையை முறைப்படுத்துவதற்காக மாதாந்த ஓய்வூதிய செலவு, ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற | அனைத்து ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் திருத்தம் செய்யும் நடைமுறைகள் மத்தியப்படுத்தப்பட்ட தரவு முறைமையினால் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகரிப்பு, குறைவு திருத்தங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையினை மாதாந்தம் தயாரித்து திணைக்கள தரவு முறைமையின் கட்டுப்பாட்டு கணக்குடன் ஒப்பீடு செய்யக்கூடிய ஒரு நடைமுறைக்கு கட்டுப்பாட்டுகணக்கு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ரிதிகம, குளியாபிடிய (கிழக்கு), களணி, நாரம்பல, பியகம ஆகிய பிரதேச செயலகங்கள் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படுவதனால் தற்பொழுது காணப்படுகின்ற அந்த கொடுப்பனவு நடைமுறைகளுக்கு இணங்க பிரதேச செயலகங்களில் தனியான ஒரு கட்டுப்பாட்டுக் கணக்கினைப் பேணுவதற்கு சில சிக்கல்கள் காணப்பட்டிருந்தும் 01/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மே மாதத்திலிருந்து கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்பட்டு வருகின்றது என பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஒ) | 2018 யூன் 20 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் | | | |
| (i) | 5 - (iii) ஆம் பந்தி | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்காக வெளிநாடு செல்லுகின்ற ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியமானது வெளிநாட்டு ஓய்வூதிய பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்தும் | பிரதேச செயலாளரினால் இன்றுவரை பதில் வழங்கப்பட்டிருக்காததனால் பதில் வழங்கியதன் பின்னர் சமர்ப்பிப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கம்பஹா பிரதேச செயலகத்தின் 05 ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியக் கோவைகள் அவ்வாறு வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 7 (ii) மற்றும் 9 ஆம் பந்திகள் | - | வெளிநாட்டு ஓய்வூதிய பிரிவினால் தூதுவராலயங்களின் மூலம் சான்றுபடுத்திய உயிர்வாழும் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தின் மூன்று ஓய்வூதியக்காரர்கள் கிராம உத்தியோகத்தரினால் கையொப்பமிடப்பட்ட உயிர்வாழும் சான்றிதழினை சமர்ப்பித்ததனை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியம் செலுத்துதல் இடம்பெற்றிருந்தது. | எதிர்காலலத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு கையொப்பத்துடனான வசிப்பிடத்தினை சான்றுபடுத்தும் பத்திரத்தினை பொறுப்பேற்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தற்பொழுது விரல் அடையாளத்தின் மூலம் உயிர்வாழ்வதனை சான்றுபடுத்தும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் அவ்வாறான தவறினை குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | 2018 யூலை 17 ஆந் திகதிய 9/2008 (திருத்தம் ii) ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | - | இராணுவ சேவை ஓய்வூதியத்தினையும் (59) பலவீன ஓய்வூதியத்தினையும் (6) ஒன்றிணைத்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் களணி நாரம்பல கண்டி பண்டுவஸ்நுவர | தொகுதிகளை ஒருங்கிணைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (மேற்கு) பியகம, திம்பிரிகஸ்யாய, ஆகிய பிரதேச செயலகங்களில் 35 ஓய்வூதியக்காரர்கள் மற்றும் தரவு முமைமையினூடாக இனங்காணப்பட்ட 03 ஓய்வூதியக்காரர்களுக்குமாக 38 ஓய்வூதியக்காரர்களுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | 2019 மே 30 ஆந் திகதிய 2/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | - | பதிவாளர் நாகத் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி கையேட்டின் கட்டளையின் பிரகாரம் அரசாங்கத்தில் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கும் நபர்களின் மரணத்தை பதிவு செய்கையில் அது பற்றி பி 73 படிவத்தினை எழுதி மாவட்ட மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளருக்கு அறிக்கையிடப்பட வேண்டுமெனவும் அதன் பிரதியை தனக்கு ஒரு வாரத்திற்கு ஒரு தடவை அனுப்புமாறும் பிரதேச செயலாளரினால் தனது கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கெள்கின்ற பதிவாளருக்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் பண்டுவஸ்நுவர | கணக்காய்வினால் தெரியப்படுத்தியதன் பின்னர் இது சம்பந்தமாக மாவட்ட பதிவாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது என பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (கிழக்கு), குளியாபிடிய (கிழக்கு) தெகிவளை, மஹரகம, ஹோமாகம பிரதேச செயலாளர்களினால் அவ்வாறு தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (க) | 2019 யூன் 11 ஆந் திகதிய 1/2019 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | - | சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியத்தினை இணங்கச் செய்தல் 2019 யூலை 01 ஆந் திகதியிலிருந்து செய்யப்பட வேண்டிய போதிலும் களணி, கம்பஹா, பண்டுவஸ்நுவர (கிழக்கு), பண்டுவஸ்நுவர (மேற்கு) ரிதிகம, நாத்தாண்டிய, பாததும்பர, நாரம்பல ஹாரிஸ்பத்துவ, வத்தளை, குளியாபிட்டி(கிழக்கு) ஆகிய பிரதேச செயலகங்களின் தெரிவுப் பரிசோதனையின் போது 255 ஓய்வூதியக்காரர்களின் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யக்கூடிய அனைத்து ஓய்வூதியங்களும் தற்பொழுது திருத்தம் செய்யப்பட்டுள்ளன எனவும் கோவைகளினுள் காணப்படுகின்ற குறைபாடுகளுக்காக ஓய்வூதியக்காரர்களிடம் காணப்படுகிறின்ற ஆவணங்களைப் பெற்றுக்கொண்டும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய ஆவணங்களைப் பெற்றும் கோவைகளை பூரணப்படுத்தி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன என பிரதேச செயலாளர்களினால் குறிப்பிடப்பட்டுள்ளது. தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்ட முரண்பாடுகளையும் பரீட்சித்ததன் பின்னர் தயாரிக்க வேண்டியுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(கா) 2022 சனவரி 20 ஆந் திகதிய 01/2022 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | 2(i) ஆம் பந்தி | 1,440,675 | எவராவது ஒரு நபர் பல ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொள்கையில் அவ்வாறான நபருக்கு தகமையாவது ஒரு மாதத்திற்கு ஒரு விசேட படி மாத்திரமாக இருந்த போதிலும் பல வகையான ஓய்வூதியங்களுக்காக தனித்தனியாக விசேட படியினை மிகையாகச் செலுத்திய 30 சந்தர்ப்பங்கள் ரிதிகம, பியகம, தொம்பே, கம்பஹா ஆகிய பிரதேச செயலகங்களிலும் தரவு முறைமையினூடாகவும் அவதானிக்கப்பட்டன. | பிரதேச செயலகங்களில் மிகையாக செலுத்தியிருந்த விசேட படி தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2(iii) ஆம் பந்தி | 445,000 | பயங்கரவாத நடவடிக்கைகளின் காரணமாக மரணமடைந்த அல்லது பலவீன நிலைக்கு மாறியுள்ள 55 வயது வரை சேவை சம்பளத்தை பெற்றுக்கொள்வதற்கு அல்லது முட்படைகள் மற்றும் பொலிஸ் உத்தியொகத்தர்களு | கம்பஹா பிரதேச செயலகத்திடமிருந்து பதில் கிடைத்த பின்னர் பதிலை சமர்ப்பிப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | க்கு அவர்களின் 55 வயதுவரை சம்பளத்திற்கு தகமையுள்ள தங்கியிருப்போர்களுக்கும் ஓய்வூதியத்துடன் ரூபா 5,000 படிக்கு தகமை இல்லை என காட்டப்பட்டிருந்தும் 10 ஓய்வூதியக்காரர்களுக்கு அப்படி செலுத்தப்பட்டிருந்தது என கம்பஹா பிரதேச செயலகத்திலிருந்தும் தரவு முறைமையினூடாகவும் அவதானிக்கப்பட்டது. | | |
| (கி) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 3(xvi) மற்றும் 5 ஆம் பந்திகள் | 902,725 | அத்தியாவசிய செலவுகளாகக் கருதக்கூடிய அனைத்து செலவுகளும் அரசாங்க நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற விழாக்கள், திறப்பு விழாக்கள், கருத்தரங்குகளை உள்ளடக்கிய தேவையற்ற மற்றும் முன்னுரிமை இல்லாத செலவுகளை கைவிடுவதற்கும் அவற்றிற்காக அரசாங்க நிதியை பயன்படுத்தாதிருக்க வேண்டிய போதிலும் 2022 தேசிய ஓய்வூதியத் தினத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. | தேசிய ஓய்வூதியத் தினத்திற்கு சமாந்தரமாக ஓய்வூதியக்காரர்களுக்கு உரிய சிகிச்சை இல்லத்தின் செயற்பாடுகளை ஐந்து மாவட்டங்களுக்கு பன்முகப்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக இப்பணம் செலவு செய்யப்பட்டது என தெரிவிக்கிறேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (கீ) | 2022 யூன் 22 அந் திகதிய 14/2022, 14/2022 (i) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2022 செப்தெம்பர் 20 ஆந் திகதிய 06/2022 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 4,491,427 | வெளிநாட்டு விடுமுறைபெற்ற உத்தியோகத்தர்கள் முறைப்படியாக பதிவு செய்யாமையால் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு பண சுற்றறிக்கைகையின் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தும் உத்தியோகத்தரை இனங்காண முடியாததனால் பங்களிப்பு பணத்தை மாதாந்தம் (2022 நவம்பரிலிருந்து 2023 பெப்ரவரி வரை) இனங்காணாத பெறுவனவாக பொதுவைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | தற்காலிகமாக பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டடுள்ள துடன் இனங்காணப்பட்டத ன் பின்னர் கணக்கீடு செய்தல் இடம்பெறும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஓய்வூதிய தினத்திற்காக கிடைத்த 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 4,413,050 வைப்பு பணம் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது அல்லது அரசாங்க வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | 2020, 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநொய் நிலைமையின் காரணமாக அனைத்து அரசாங்க விழாக்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அதனால் தேசிய ஓய்வூதிய தினத்திற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அனைத்து விழாக்களும் இரத்துச் செய்யப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய ஓய்வூதியத் தினத்திற்கு | நிதிப்பிரணமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சமாந்தரமாக ஓய்வூதியக்காரர்கள் தொடர்பான சிகிச்சை இல்லத்தின் செயற்பாடுகளை பயன்முகப்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட விழாவிற்காக ரூபா 497,000 பணம் இவ்வைப்பிலிருந்து பயன்படுத்தப்பட்டது. | |

**2.5 வங்கி கணக்கு செயற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 33,518,799 ஆன 243 காசோலைகள் இனங்காணப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்கண்டு தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அனைாதைகள் ஓய்வூதியத்திற்காக 7041643 ஆம் இலக்க இலங்கை வங்கி கணக்கு மற்றும் உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்காக 7041644 ஆம் இலக்க இலங்கை வங்கி கணக்கில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறாததனால் அவை செயற்பாடற்ற வங்கி கணக்காக காணப்படுகின்றது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | 07/2006 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு பிரேரணை இலக்கம் 425 மற்றும் 426 இன் மூலம் பாராளுமன்றத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு இணங்க நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமற்ற நிதியங்கள் மீளாய்வு செய்யப்பட்டு பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்துதலினை சான்றுபடுத்தும் வகையில் பொதுத்திறைசேரியினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் இந்நிதியம் தொடர்பான அதிகாரச் சட்டம் திருத்தம் | செயற்பாடற்ற கணக்குகள் மூடப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டு மூடப்பட வேண்டுமென பிரேரிக்கப்பட்டிருந்தும் அக்குழுவின் இறுதித் தீர்மானம் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு, வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம், திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது அந்த அறிக்கையினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் வழிகாட்டி இலக்கம் 12 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மனதவளங்கள் முகாமைத்துவம், முறைமை அபிவிருத்தி, மென்பொருள் வசதிகள் அபிவிருத்தி, மூலதனச் சொத்துக்களை | 2023 ஆம் ஆண்டின் போது முறைமையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மென்பொருள் வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மூலதனச் சொத்துக்களை சுவீகரித்தலின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக செலவு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுவீகரித்தல் ஆகிய செயற்பாடுகளின் செயலாற்றலினை அளவீடு செய்யும் குறிக்காட்டி (KPI) மற்றும் வெளியீடு (output) என்பன தெளிவாக இனங்காணப்படவில்லை. | செய்யப்பட்ட பணத்தின் அளவு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |

### 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக ரூபா 500,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அச்செயற்பாடு நிறைவேற்றப்படாததனால் காணப்படுகின்ற தரவு முறைமையை மேம்படுத்துவதற்குத் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் செயற்பாடும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | முன்னுரிமையற்ற செயற்திட்டங்கள் மற்றும் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை தள்ளிவைக்குமாறு தெரியப்படுத்தியிருந்ததனால் திட்டமிட்டவாறு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல் கைவிடப்பட்டுள்ளது. | முன்னுரிமைக்கு இணங்க செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ஓய்வூதிய திணைக்களத்தின் தரவு மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமையின் பாதுகாப்பு சம்பந்தமாக இலங்கை CERT நிறுவனத்துடன் 2022 மே 17 ஆந் திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கையினை அமுல்ப்படுத்தும் தொடக்கத்திலேயே முழுக்கிரயத்தில் 50 சதவீத | முதலாவது காலாண்டிற்காக இச்செலவு விடயத்தின் கீழ் ரூபா 3.7 மில்லியன் ஒதக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மார்ச் 31 அந் திகதியில் உள்ளவாறு மிகுதியாகவிருந்த நிதி ஏற்பாட்டினை வினைத்திறனாகப் பயன்படுத்தி இந்த இன்வொயிசுக்காக காசோலை | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| முற்பணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் உடன்படிக்கையினை அமுல்ப்படுத்துதல் 2022 மே 17 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2022 மார்ச் 31 ஆந் திகதி மொத்த கிரயம் ரூபா 1,660,550 செலுத்தப்பட்டிருந்தது. | எழுதப்பட்டிருந்தும் அக்காசோலை உரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதானது நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடு பூரணப்படுத்தப்பட்டதன் பின்னராகும். |

## 3.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் இன்னும் அறவிடப்பட வேண்டிய மிகையாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தின் பெறுமதி ரூபா 785 மில்லியனாகும். இப்பெறுமதி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 301,522 தொகையையும் 05 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்டு வரும் ரூபா 47 மில்லியன் தொகையையும் 05 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 738 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் அறவிட வேண்டிய பணம் ரூபா 785 மில்லியனாகும். அப்பணம் தற்பொழுது அறவிடப்பட்டு வருகின்றது. | மிகைக் கொடுப்பனவை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். . |
| (ஆ) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக மாவட்ட செயலகத்தினால் அனுப்பப்பட்ட அறிக்கைகளின் மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியுடன் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான இறுதி மீதி இணங்கியிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்தினால் அனுப்பப்பட்ட நட்டங்கள் சேதங்கள் தொடர்பான இறுதி அறிக்கை மற்றும் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட ஆண்டு இறுதி நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டிற்கு இணங்க இணங்கியிருக்காததுடன் அதற்கு பல்வேறு காரணங்கள் தாக்கமளித்துள்ளது. | மாவட்ட செயலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் ஆண்டு இறுதி மீதிகள் ஒன்றுக்கொன்று ஒப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

**3.5 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட 43 கணக்காய்வு ஐய வினாக்களில் 21 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பதில் வழங்கப்படவில்லை. | பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு அந்த அலுவலகங்களினால் அனுப்பப்பட்ட பதிலில் குறைபாடுகள் உள்ளதனால் அவற்றை பரீட்சித்து மீண்டும் மீண்டும் அந்த அலுவலகங்களுக்கு தெரிவித்து அக்குறைபாடுகளை சரிசெய்து மீண்டும் பதிலினைப் பெற்று இறுதியாக பதில் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததனால் அதற்காக காலதாமதம் ஏற்படும். | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) ஊனமுற்றோர் ஓய்வூதிய கொடுப்பனவின் போது ஊனமுற்றோர்களை மருத்துவ சபைக்கு முன்வைத்து ஊனமுற்றதனை உறுதிப்படுத்துகின்ற மருத்துவ அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான முறைப்படியான உறுதிப்படுத்தல் இல்லாது ஊனமுற்ற ஓய்வூதியம் செலுத்திய 08 சந்தர்ப்பங்கள் 04 பிரதேச செயலகங்களில் அவதானிக்கப்பட்டது. | ஓய்வூதியக்காரர்களை மீண்டும் மருத்துவ சபைக்கு முடியுமான அளவு விரைவாக அனுப்பி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டன என்று குண்டசாலை பிரதேச செயலகத்தினால் குறிப்பிடப்பட்டது. களணி பிரதேச செயலகம் - 2018 யூலை மாத்திலிருந்து ஓய்வூதிய கொடுப்பனவை நிறுத்தியுள்ளது. பாதும்பர பிரதேச செயலகம் - மருத்துவ சபை அறிக்கையினை சுகாதார அமைச்சின் மூலம் | ஊனமுற்ற நிலைமையை உறுதிப்படுத்தும் முறைப்படியான மருத்துவ அறிக்கை பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகரித்ததன் பின்னர் ஊனமுற்றோர் ஓய்வூதிய கொடுப்பனவை ஆரம்பித்துள்ளது. | |
| (ஆ) | குண்டசாலை பிரதேச செயலகத்திற்குரிய மத்திய தரவு முறைமையில் 09 கோவைகள் வெளிநாட்டு கோவைகளாக இனங்காணப்பட்டிருந்தும் (“Foreign Trf”) ஓய்வூதியக்காரர்கள் வெளிநாடு சென்றுள்ளார்கள் என பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்தப்படாததுடன் உயிர்வாழும் சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கவில்லை. கிராம உத்தியோகத்தரினாலும் உயிர்வாழும் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாது வெளிநாடு சென்ற அந்த ஓய்வூதியக்காரர் தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்காதிருந்தும் ஓய்வூதியத்தினை நிறுத்துவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | வெளிநாடு சென்றமை சரியாக தெரியப்படுத்தப்பட வேண்டியதுடன் வருடாந்தம் உயிர்வாழும் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 பெப்ரவரி 07 ஆந் திகதிய KDS/KUN/KUN/02/08 ஆம் இலக்க கடிதத்தினால் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 1-725735 ஆம் ஓய்வூதிய இலக்க ஓய்வூதிய கோவையானது 2020 திசெம்பர் 13 கணக்காய்வுத் திகதி வரை குண்டசாலை பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | அக்கோவை சம்பந்தமான தகவல்களைப் பரீட்சித்து எதிர்காலத்தில் பதிலை வழங்குவேன். | தாமதமின்றி கோவையை பரிமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அனாதைகளின் வயது 21 ஆண்டுகள் பூர்த்தியாகும் போது அனாதை 5/1, அனாதை 6, அனாதை 8 ஆகிய படிவங்கள் பூர்த்தி செய்யப்படவேண்டிய போதிலும் கம்பஹா பிரதேச செயலகத்தில் 04 ஓய்வூதியக்காரர்களுக்கு அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக கம்பஹா பிரதேச செயலகத்தினால் பதில் வழங்கப்படவில்லை. | முறைப்படியாக படிவத்தை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் படிகள்/ ஓய்வூதியங்களைத் திருத்தம் செய்தல் நிறுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது ஓய்வூதியம் செலுத்தப்பட்ட 10 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 489,055 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | கம்பஹா, களணி, ரிதிகம ஆகிய பிரதேச செயலகங்கள் பதில் வழங்கியிருக்கவில்லை. குளியாபிடி (கிழக்கு) பிரதேச செயலகம் பரீட்சித்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும். ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகம் பதவியிலிருந்து இராஜினாமா செய்யப்பட்டுள்ளது என்பதனைக் காட்டும் ஒரு அறிக்கையை கோவையில் இணைத்துள்ளது என பிரதேச செயலாளரினால் குறிப்பிட்டுள்ளது. | மிகைக் கொடுப்பனவை தரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஊனமுற்றோர் ஓய்வூதியத்திற்கு தகமையற்ற நபர்களுக்காக ஓய்வூதியத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த 3 சந்தர்ப்பங்கள் பாததும்பர பிரதேச செயலகத்தில் அவதானிக்கப்பட்டது. | ஊனமுற்றோர் ஓய்வூதியத்திற்காக பங்களிப்பாளர் அல்லது மனைவி மரணமடைந்த பின்னரே விண்ணப்பிக்கப்பட்டிருந்தது என்ற போதிலும் அனைத்து ஊனமடைதல் நிலைமை ஏற்பட்டிருந்ததானது அனாதையின் வயது பூர்த்தியடைவதற்கு முன்னர் என மருத்துவ சபை அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுகின்றது என பிரதேச செயலாளரினால் | மருத்துவ சபை அறிக்கையின் மூலம் ஊனமுற்றமையினை நிரந்தமாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டது. | |
| (எ) | பாதும்பர பிரதேச செயலகத்தில் 21-1251535, 21-202514 ஆம் ஓய்வூதியம் 1984 நவம்பர் 05 ஆந் திகதியிலிருந்து செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளும் போது விதவையினால் தமது முன்னைய திருமணம் தொடர்பான தகவலை மூடிமறைத்து இரண்டாவது திருமண சான்றிதழுக்கும் திருமணமாகாதவர் எனக்குறிப்பிட்டு ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் முதலாவது திருமணத்தின் கணவர் தொடர்பான தகவலை விதவை மற்றும் சிவில் கோவைகள் இரண்டிலும் உள்ளடக்காததுடன் முதலாவது திருமணத்தின் பிள்ளையின் பிறப்பு சான்றிதழில் முதலாவது கணவனின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்திருமணம் முடிவுற்றமை தொடர்பான தகவலை வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க முதலாவது திருமணம் முடிவடைந்தமை உறுதிப்படுத்திக்கொள்ளாது விதவை ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இது சம்பந்தமாக எதிர்காலத்தில் பதிலை சமர்ப்பிப்பேன். | முறைப்படியாக உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | பாததும்பர பிரதேச செயலகத்தில் 01-1107670 ஆம் ஓய்வூதிய இலக்க ஓய்வூதியக்காரர் நிருவாக மேன்முறையீட்டு நீதிபதிகள் அதிகார சபையின் 2019 ஒக்தோபர் 19 ஆந் திகதிய தீர்மானத்திற்கு இணங்க 2013 சனவரி 11 ஆந் திகதியிலிருந்து சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டதுடன் 2013 சனவரி 11 ஆந் திகதியிலிருந்து 2013 மே 16 ஆந் திதகி வரை செலுத்தியுள்ள ரூபா 136,155 சம்பளத்தை அறவீடு செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2019 நவம்பர் 16 ஆந் திகதி தெரியப்படுத்தியிருந்தும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஓய்வூதியத்திற்கு தகமை இல்லாதிருந்த போதிலும் செலுத்தப்பட்ட ரூபா 560,339 ஓய்வூதியம் மற்றும் ரூபா 187,434 ஓய்வூதிய பணிக்கொடையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1-1107670 ஆம் ஓய்வூதிய இலக்க ஓய்வூதியக்காரருக்கு செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 136,154.83 பணம் குண்டசாலை பிரதேச யெலாளரினால் 2021-08-13 ஆந் திகதி அறவீடு செய்யப்பட்டுள்ளது எனவும் செலுத்தப்பட்ட ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை பணமாகிய ரூபா 675,604.67 தொகையினை அறவீடு செய்வதற்காக ஓய்வூதியக்காரருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டது எனவும் பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்பட்டிருந்தது. | தகமையற்ற ஓய்வூதியக் கொடுப்பனவினை துரிதமாக அறவீடு செய்லவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | ஒவ்வொரு ஓய்வூதியக்காரருக்காகவும் ஓய்வூதியக்கோவை பேணப்பட வேண்டிய போதிலும் களணி பிரதேச செயலகத்தில் 07 ஓய்வூதியக்காரர்களுக்கும் நாத்தான்டிய பிரதேச செயலகத்தில் ஒரு ஓய்வூதியக்காரருக்கும் ஓய்வூதியக் கோவை இல்லாது ஓய்வூதியம் செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | • களணி பிரதேச செயலகம்- தற்காலிக கோவையினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டது.<br>• நாத்தான்டியா பிரதேச சபை இது தொடர்பாக பரீட்சித்து பதில் சமர்பிப் பேன். | |
| (ஒ) | 18 வயது பூர்த்தியடைந்திருந்ததனால் உரிய வங்கி பாஸ் புத்தகம் சிறுவர்களிடம் ஒப்படைக்கவேண்டிய போதிலும் நாரம்மல மற்றும் பியகம பிரதேச செயலகங்களில் 05 சிறுவர்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | • நாத்தாண்டிய பிரதேச செயலகம்- வயது பூரணமடைந்த பிள்ளைகளின் பாஸ்புத்தகம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>• பியகம பிரதேச செயலகத்தில் பிள்ளைகள் பற்றிய எந்த தகவலையும் தேடிக்கண்டுபிக்க முடியாதுள்ளது எனவும் மேலும் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. | 18 வயது பூர்த்தியடைந்த நபர்களின் பாஸ்புத்தகத்தை துரிதமாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் 21-204986 ஆம் இலக்க ஓய்வூதியக்காரர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டதுடன் ஓய்வூதியத்தினை தயாரிப்பதற்கு அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 8.2 (i) மற்றும் (ii) ஆம் பந்தியின் பிரகாரம் நன்னடத்தை குறிப்பின் பிரதியும் நி.பி 1729 | சுகாதார பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அந்த ஓய்வூதியக்காரரின் நன்னடத்தை குறிப்பின் பிரதியை அனுப்புமாறு தெரியப்படுத்தியிருந்தும் அப்பிரதி அனுப்பப்பட்டிருக்காததுடன் அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 121 ஆம் பந்தியின் பிரகாரம் தகவல்கள் மற்றும் பங்களிப்பு பணம் | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத்திற்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையும் ஓய்வூதிய விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. இலங்கை ஓய்வூதியம் 2020 கையேட்டின் 4.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் 1981 யூலை 02 ஆந்திகதிக்கு முன்னர் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்கள் சம்பந்தமான தகவல்களை தேடிக்கண்டுபிடிக்க முடியாதிருக்கையில் ஒரு ரூபா அடிப்படையில் கணிக்கப்பட்டு ஓய்வூதியம் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஓய்வூதியம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | அறவிடப்பட்டது எனபதற்கான அறிக்கை வழங்கப்பட்டள்ளது என பிரதேச செலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சித்து சரிசெய்யப்பட வேண்டுமாகவிருந்தால் அதனை சரிசெய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஔ) | ஹரிஸ்பத்துவ பிரதேச செலகத்தின் 21-300870 ஆம் ஓய்வூதிய இலக்க ஓய்வூதியக்காரரின் நன்னடத்தை குறிப்பு பத்திரத்தின் பிரதிகளும் படிவம் 12 இல் ஓய்வூதியத்தினை கணிப்பீடு செய்யும் போது நாளாந்த சம்பளத்தின் அடிப்படை மற்றும் ஓய்வூதியம் இழக்கப்பட்ட காலம் என்ற அடிப்படைக்கு இணங்க சேவையாற்றிய காலத்தினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது சேவைக்காலம் முழுவதும் ஓய்வூதியத்துடன் என்ற அடிப்படையில் சேவையாற்றியதாகக் கருதப்பட்டிருந்தது. மேலும் ஓய்வூதியம் வழங்கல் பத்திரமும் கோவையில் இல்லாதிருந்ததுடன; 6/2006 மற்றும் 14/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகள் | கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் கோவையில் ஓய்வூதியம் வழங்கல் பத்திரம் இணைக்கப்பட்டிருந்தது என பிரதேச செயலகத்தினால் குறிப்பிட்பட்டது.<br><br>அந்த ஓய்வூதியம் தொடர்பாக கணிப்பீடு செய்தல் ஓய்வூதியக் கோவையில் உள்ளடக்கப்பட்டிருந்தது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | சேவைக்காலத்தினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஓய்வூதிய திருத்தத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சம்பளம் சரியானதா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (க) | 2014 சனவரி 10 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு அரசாங்க ஊழியருக்கு கிடைக்கின்ற ரூபா 7,800 வரை வாழ்க்கைச் செலவுப்படி பெற்றுக்கொள்ளக்கூயதாக இருந்த போதிலும் ஒரே விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஓய்வூதிய மற்றும் வாழ்வாதார படிக்காக ஓய்வூதியத்தினைப் போல வாழ்வாதார படிக்கும் இன்னுமொரு படியாக வாழ்க்கைச் செலவுப் படியினை இரண்டு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டதனால் அது சச்சரவுத்தன்மையான கொடுப்பனவாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க ஓய்வூதியம் மற்றும் வாழ்வாதார படி இரண்டு சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்ததனால் ரிதிகம பிரதேச செயலகத்தில் மூன்று ஓய்வூதியக்காரர்களுக்கு ரூபா 1,415,695 தொகையும் குண்டசாலை பிரதேச செயலகத்தில் ஐந்து ஓய்வூதியக்காரர்களுக்கு ரூபா 1,935,900 தொகையும், நாரம்பல பிரதேச செயலகத்தில் ஒரு ஓய்வூதியக்காரருக்கு ரூபா 465,300 தொகையும் பாததும்பர பிரதேச | 1/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றிக்கைக்கு இணங்க ரூபா 7,800 எல்லையினை மிகைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை என்பதனால் மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒரே விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஓய்வூதியம் மற்றும் வாழ்வாதார படிக்கு இன்னுமொரு படியாக வாழ்க்கைச் செலவுப் படிச் சந்தர்ப்பம் இரண்டினையும் செலுத்துதல் சம்பந்தமாக கவனித்துப்பார்த்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலகத்தில் ஒன்பது ஓய்வூதியக்காரர்களுக்கும் வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 3,816,895 மிகையாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (கா) | குளியாபிட்டிய (கிழக்கு), நிதிகம, கம்பஹா, குண்டசாலை, களணி, பியகம ஆகிய பிரதேச செயலகங்களில் ஓய்வூதியக்காரர் மரணமடைதல், பதிவுசெய்யப்பட்ட மரணச்சான்றிதழினை பெற்றுக்கொள்ளாமை, ஓய்வூதிய திருத்தத்தின் போது இடம்பெற்ற பிழைகள், மரணமடைந்தததனை தெரியப்படுத்துதல் தாமதமடைந்தமை, ஓய்வூதியத்தினை கணிப்பீடு செய்யும் போது இடம்பெற்ற தவறுகள், சிவில் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கும் போது ஊனமுற்றமை, ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளல், கணனி முறைமையினை நாளதுவரையாக்காமை முதலிய காரணங்களின் அடிப்படையில் 50 ஓய்வூதியக்காரர்களுக்கு ரூபா 10,511,788 ஓய்வூதியம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | பரீட்சித்து எதிர்காலத்தில் பதில் சமர்ப்பிக்கப்படும். | உரிய விடயத்தினை உறுதிப்படுத்துதல்/ இனங்காணப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் ஓய்வூதியக்காரர்கள் மரணமடைந்ததன் பின்னரும் அவர்களின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட பணத்தை அறவீடு செய்யும் போது ரூபா 172,279 குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | பின்னர் பதிலினை சமர்ப்பிப்பேன். | மிகைக் கொடுப்பனவினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | ஓய்வூதியக்காரர்களின் பணிக்கொடைப் பணத்தை மிகைத்து அரசாங்கத்தினால் இன்னும் அறவிட வேண்டிய மீதி இருக்கையில் அப்பணத்தை மாதாந்தம் ஓய்வூதிய முறைமையினூடாக கழித்து உரிய நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்திருந்த 05 சந்தர்ப்பங்கள் 2021 செப்தெம்பர் மாத கொடுப்பனவு வவுச்சரினை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டதுடன் இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஓய்வூதியக்காரர் ஓய்வூதியத்தினை கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் திடீரென மரணமடைந்ததால் அப்பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக ஆபத்து காணப்படுவதுடன் அது சம்பந்தமாக உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்துவது சம்பந்தமான ஒரு வேலைத்திட்டம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிக்கொடையினை மிகைத்து ஏதாவது பணம் காணப்படுமாகவிருந்தால் அதனை மாதாந்தம் நிலுவை ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செய்து உரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஓய்வூதியம் தொடங்குவதற்கு முன்னர் ஓய்வூதியக்காரர் மரணமடைவதினூடாக அரசாங்கத்தினால் அறவிட வேண்டிய பணத்தின் ஆபத்தானது ஓய்வூதியத் திணைக்களம் அன்றி ஓய்வூதியம் பெறும் நிறுவனம் உத்தியோகத்தர் ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னர் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்துவது சம்பந்தமாக ஒரு வேலைத்திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கு) | வததேகம நகரசபையின் வருமான பரிசோதகராக சேவையாற்றிய ஒரு உத்தியொகத்தர் 2010 மே மாதம் 23 ஆந் திகதி மரணமடைந்திருந்ததுடன் முதலாவது திருமணத்தின் விவாகரத்து வழக்கு தீர்ப்பு கூற்று நிச்சயிக்கப்பட்டிருக்காததனால் மரண பணிக்கொடைப் பணத்திலிருந்து வத்தேகம நகர சபையினால் | வாரிசுக்கு தகமையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். 50-2010711 ஆம் ஓய்வூதிய இலக்க பிள்ளையின் வயது பூர்த்தியடைந்ததனால் அவரின் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருந்தும அப்பங்கானது 50-2010712 ஆம் ஓய்வூதிய இலக்க பிள்ளைக்கு செலுத்துவதற்கு முடியாதிருந்தது | மரண பணிக் கொடைப் பணத்தினை துரிதமாக வாரிசுக்கு தகமையளித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்ததன் பின்னர் மிகுதிப் பணமான ரூபா 237,492 தொகை 2023 மார்ச் 02 ஆந் திகதி ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தும் வாரிசுகாரருக்கு தகமையாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும் முதலாவது இரண்டு பிள்ளைகளுக்கும் தகமையுள்ள ஓய்வூதியம் முறையே 50-2010711 மற்றும் 50-2010712 இன் கீழ் 50 சதவீதம் படி வழங்கப்பட்டுள்ளதுடன் பின்னர் அவரின் பங்கினையும் சேர்த்து 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2022 திசெம்பர் 09 ஆந் திகதி வரையான பங்கு ரூபா 500,400 தொகை இளம் பிள்ளைக்கு வழங்கப்படாது ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. | தவறுதலினால் என பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. | |
| (கூ) | 24 -71678 ஆம் ஓய்வூதிய இலக்க ஊனமுற்ற ஓய்வூதியக்காரரினால் 1997 சனவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலுக்கு இணங்க 2000 சனவரி 08 ஆந் திகதி வழங்கல் பத்திரத்தின் மூலம் 1990 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து ஊனமுற்ற ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது<br>.<br><br>• எவ்வாறாயினும் அவர் போக்குவரத்துச் சபையின் கல்முனை டிப்போவின் களஞ்சிய பொறுப்பாளராக சேவையாற்றி | பரீட்சித்து எதிர்காலத்தில் பதிலை சமர்ப்பிப்பேன். | பிழையான கொடுப்பனவு சம்பந்தமாக துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இருந்தும் 1990 யூலை 23 ஆந் திகதி பயங்கரவாத தாக்குதலுக்கு உள்ளாகி ஊனமுற்ற நிலைமைக்கு மாறியிருந்ததனால் 1988 யூலை 13 ஆந் திகதிய 21/88 ஆம் இலக்க அரசாங்க போக்குவரத்து நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்து சபையிலிருந்து படி கிடைக்குமாயிருந்தால் அக்காலப்பகுதிக்கு அதாவது 32 வயதிலிருந்து 55 வயது வரையான காலப்பகுதிக்கு ஊனமுற்ற ஓய்வூதியமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

- இது சம்பந்தமாக ஓய்வூதிய திணைக்களத்தினால் அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு நி.பி 104 இன் பிரகாரம் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தெரியப்படுத்தியிருந்தும் 2022 ஆகஸ்ட் 05 ஆந் திகதி வரை 03 அண்டுகள் கடந்திருந்தும் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- இதற்கிணங்க 1990 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து 2018 பெப்ரவரி 09 ஆந் திகதி வரை ஊனமுற்ற ஓய்வூதியமும் படியும்

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,877,159 தொகை பிழையாக செலுத்தப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (கெ) | தரவு முறைமையில் காணப்பட்ட பலவீனங்கள் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதனிக்கப்பட்டன. | | |
| (i) | குளியாபிடிய (கிழக்கு) பிரதேச செயலகம் 21-400006 ஆம் ஓய்வூதிய இலக்க ஓய்வூதியக்காரரின் ஓய்வூதியக் கொடுப்பனவினை பரீட்சித்த போது மிகையாகச் செலுத்திய பணம் ரூபா 424,925 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அவரின் ஓய்வூதியம் 2021 மார்ச் 01 ஆந் திகதி ஆரம்பிப்பதன் காரணமாக அவருக்கு செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 52,875 மற்றும் ரூபா 17,625 செம்மையாக்கப்படாது தரவு முறைமைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. மிகையாகச் செலுத்திய ஓய்வூதியத்தினை மீள அறவீடு செய்தல் மாதாந்த அறிக்கையின் பிரகாரம் 2022 | 2022 ஒக்தோபர் மாதம் வரை ரூபா 112,500 அறவிடப்பட்டுள்ளது. 2022 நவம்பர் மாதம் நிலுவைப் பணத்தை செலுத்தும் போது ரூபா 17,625 அறவிடப்பட்டுள்ளது. அந்த ஓய்வூதியக்காரர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் காரணமாக வாழ்க்கைச் செலவுப்படி சேர்த்துக்கொள்ளப்படாமையால் செலுத்த வேண்டிய ரூபா 52,875 நிலுவைப் பணமும் மேற்கூறிய மிகைக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்பட்டது. அதற்கிணங்க இன்னும் அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 241,925 ஆகும். அந்த ரூபா 241,925 தொகையானது ரூபா 6,000 மாதாந்த தவணைப் பணத்தினை அறவீடு செய்வதற்காக 2023 பெப்ரவரி மாத்திலிருந்து ஓய்வூதிய தரவு முறைமைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2023-05-10 ஆந் திகதி வரை ரூபா 24,000 அறவிடப்பட்டிருந்தது. இன்னும் அறவிட வேண்டியுள்ள பணம் ரூபா 217,925 ஆகும். | கொடுப்பனவு மற்றும் பெறுவனவு சம்பந்தமான தகவல்களை சரியாக தரவு முறைமைக்குள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தரவு முறைமையினூடாக தொடர்ச்சியாக அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் மாத்தின் போது மிகைக் கொடுப்பனவினை அறவீடு செய்தல் அறிக்கையிடப்பட்டிருந்தும் 2022 நவம்பர் மாதத்தில் இந்த அறவீடு சம்பந்தமான தகவல் தரவு முறைமையிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மரமடைந்த 21-40921 ஆம் ஓய்வூதிய இலக்க ஓய்வூதியகாரர் மற்றும் 1-1225845/21-2011271 ஆம் ஓய்வூதிய இலக்க ஓய்வூதியக்காரருக்கு அவர்கள் மரணமடைந்த திகதியிலிருந்து 2022 ஆகஸ்ட் 16 கணக்காய்வுத் திகதி வரை ரூபா 3,434,597 பணம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தமை தரவு முறைமையை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. | அறிக்கையில் குறிப்பிட்ட இரண்டு ஓய்வூதியக்காரர்களை இனங்காண முடியாதுள்ளது. | தரவு முறைமையினை நாளது வரையாகப் பேணுதல் வேண்டும். |
| (iii) | 08 பிரதேச செயலகங்களின் தரவு முறைமையினுள் உள்ளடக்கப்பட்ட ஓய்வூதியக்காரர்கள் சம்பந்தமாக ஓய்வூதியக்காரர்களின் பிறந்த | ˙ ஓய்வூதியக்காரரின் பிறந்த திகதியை பிறப்புச் சான்றிதழினைப் பரீட்சித்து உள்டக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.<br><br>உயிர்வாழ் சான்றிதழ் வழங்கப்படாது எனினும் | தரவு முறைமையை சரியாக நாளதுவரையாக்குதல் வேண்டும். |

| | |
|---|---|
| திகதியை உள்ளடக்கியிருக்காத 12 சந்தர்ப்பங்களும் உயிர்வாழ் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என தரவு முறைமையினுள் குறிப்பிடப்பட்டிருந்தும் ஓய்வூதியம் செயற்படும் நிலையில் காணப்பட்ட 207 சந்தர்ப்பகளும் தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ளடக்கப்பட்டிருக்காத 21 சந்தர்ப்பங்களும் ஓய்வூதியக்காரர் மரணமடைந்த திகதியை உள்ளடக்கியிருக்காத 02 சந்தர்ப்பங்களும் உயிர்வாழும் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தும் தரவு துறைமைக்குள் உயிர்வாழ் சான்றிதல் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட 24 சந்தர்ப்பங்களும் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பிறந்த திகதி பொருந்தியிருக்காத 07 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | செயற்படும் நிலையில் காணப்பட்ட ஓய்வூதியம் சம்பந்தமாக ஆண்டின் இடைநடுவில் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்ட ஓய்வூதியத்தினை தவிர்த்து வதிவிடத்தை உறுதிப்படுத்தாத ஓய்வூதியக்காரர்களின் சம்பளம் 2022 செப்தெம்பர் மாத்திலிருந்த நிறுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.<br><br>தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ளடக்கப்படாத ஓய்வூதியக்காரர்களின் தேசிய அடையாள அட்டையை தயாரிப்பதற்காக ஆட்களைப் பதிவுசெய்யயும் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>தேசிய அடையாள அட்டை இலக்கமும் பிறந்த திகதியும் பொருந்தாத 03 சந்தர்ப்பங்களுடனான ஓய்வூதியகாகரர்களின் ஓய்வூதியம் செயற்பாடற்றதாக்கப்பட்டுள்ளதுடன் 02 ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய ஓய்வூதியக்காரர்கள் சம்பந்தமாக பதில் வழங்கப்படவில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்திக்கான குறிக்கோள்களின் கீழ் ஓய்வூதிய திணைக்களத்தினால் ஒரு குறிக்கோள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது. அக்குறிக்கோள் சம்பந்தமாகவும் தெளிவான இலக்கு தோற்றுவிக்கப்படாததுடன் அடிப்படையான தரவும் செயல்முன்னேற்றத்தினை அளவீடு செய்யும் குறிகாட்டியையும் முறைப்படியாக தோற்றுவித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அமுல்ப்படுத்துவதற்காக நிறுவனத்தின் கடமைகளுடன் தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்களும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இக்குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதலினை ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் மாத்திரம் மேற்கொள்ள முடியாத போதிலும் ஓய்வுபெற்றதன் பின்னர் வழங்கக்கூடிய பிரதிபலன்கள் தொடர்பாக சமூகத்தின் அனைத்து பிரிவினையும் உள்ளடக்கும் வகையில் வரிவான ஓய்வூதிய உள்ளடக்க முறைமையினை தயாரிப்பதற்குரிய அடிப்படை கருதுகோள் மற்றும் பிரேரணை 2020 ஆம் ஆண்டின் ‘‘அனைவருக்கும் ஓய்வு” பிரேரணையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |